DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No. 613/2021 |
| Deposition of witness | : | PW - 1 |
| Name | : | ரவி |
| Father's /Husband Name | : | நடேசன் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 59 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24th day June 2024.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறேன். கடந்த 2021-ம் வருடம் பேரளம் காவல்நிலையத்தில் பணியிலிருந்த பொழுது பேரளம் காவல் நிலைய குற்ற எண்.129/2017 சட்டப்பிரவுகள் 147, 148, 294(பி), 506(2), 307 இ.த.ச பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பான PRC.No.06/2018 என்ற வழக்கின் எதிரியான திருப்பாம்புரம் கம்பூர் வடக்குவெளியை சேர்ந்த ராஜீவ்காந்தி த/பெ. ஜெயராஜ் என்பவர் மேற்படி PRC வழக்கில் நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிணையில் சென்றவர் சரிவர நீதிமன்ற வாய்தாவிற்கு ஆஜராகாததால் கடந்த 10.12.2019-ம் தேதி அவருக்கு எதிராக பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த பிடிக்கட்டளையை நிறைவேற்றம் செய்ய வேண்டி எனக்கு பணி ஒதுக்கப்பட்டது. நான் எதிரியை பல இடங்களில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. எனவே, மேற்படி எதிரி ராஜீவ்காந்தி மீது நீதிமன்ற பிணை உத்தரவினை மீறிய குற்றத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி தனி அறிக்கை அளித்தேன். தற்பொழுது என்னிடத்தில் காண்பிக்கப்படும் தனி அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த தனி அறிக்கை நான் கொடுத்தது தான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் அளித்த தனி அறிக்கையின் மீது உதவி ஆய்வாளர் பாபுதாஸ் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

-இல்லை-

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.